[18th December 1956

abolition. On account of local influence, a municipal council may propose the abolition, reduction or raising of any tax. Therefore, Government control is necessary.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—TIME FOR RECEIPT OF NOTICE OF CUT MOTIONS.

DEPUTY SPEAKER : I have to inform the House that under Rule 161 (2) (iii) of the Madras Assembly Rules, notices of cut motions should be delivered in the Assembly office before 3 p.m. on Tuesday, the 18th December 1956. No exception will be made to this rule on any account.

Sri V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை விதியின் கீழ் தலைவர் அவர்களிடத்தில் ஒரு புகார் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. அங்கத்தினர் எல்லோருக்கும் ஒரு கட்டு புஸ்தகங்கள் கொடுக்கப்பட்டன. அந்தக் கட்டு புஸ்தகங்களில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ஒரு அறிக்கையும் இருந்தது. அந்த அறிக்கையைப் பெறுவதற்கு இந்த சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் அருகதை உள்ளவர்களா ? ஏனென்றால், இங்கு இருக்கும் பல அங்கத்தினர்கள் காதல் போராட்டத்தில் தோல்வியுற்று கலியாணம் ஆகாதவர்களாக இருக்கிறார்கள். இந்த முதல் ரக பிரும்மசாரிகளுக்கும் மனைவியை இழந்து வாழ்க்கையில் வாடி வதங்கி இருப்பவர்களுக்குங் கூட இந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக நமது முதல் மந்திரி அவர்களுக்கும் இந்த அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகையினால் இவர்களிடமிருந்து இந்த அறிக்கையை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (பலத்த கரகோஷம்.)

III.—STATEMENT UNDER RULE 40 *RE* FOOD SITUATION IN THE STATE.

DEPUTY SPEAKER : Sri A. Ratnam will now under Rule 40 call the attention of the Minister for Agriculture to a matter of urgent public importance. I want the hon. Member to be brief in his remarks.

Sri A. RATNAM : Sir, I rise to call the attention of the Minister for Agriculture to a matter of urgent public importance, viz., deterioration in the food situation in the State.

உணவுப் பிரச்னை மிக நெருக்கடியான பிரச்னையாக நம் நாட்டிலே நிலவி வருகிறது. கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய ராஜ்ய சர்க்காரும் மத்திய சர்க்காரும் உணவு அபிவிருத்திக்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களை செலவழித்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு பல சட்டங்களும் கொண்டு வந்திருக்கிறார்கள். மான்யங்களும் கடன்களும் வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் கூட, நம்முடைய சென்னை ராஜ்யத்தில் அரிசி கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் 'சட்ட சபை அங்கத்தினர்கள் நிலைமையை மிகைபடுத்திக் கூறுகிறார்கள். உணவு உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிறோம்' என்று கூறுகிறார்கள். சென்ற சட்ட சபைக் கூட்டத்தில் இதுபற்றி கேட்கப்பட்டபொழுது 'மலையாள ஜில்லாவுக்கு நம்முடைய தமிழ் நாட்டு அரிசி சென்று விடுகிறது. ராஜ்ய சீரமைப்புக்குப் பிறகு